Free Copy
Issue #027

Derek Prince
MINISTRIES INDIA

திட நம்பிக்கை

- By Derek Prince



நம் நாட்டின் பொருளாதாரம் சரிவடைய போகிறது என்று மக்களை நீங்கள் நம்ப வைத்து, அனைவரும் அதைப்பற்றி பேச வைத்துவிட்டால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பொருளாதாரம் சரிவடைவது தான்! இதற்கான எளிய காரணம் நம்முடைய பொருளாதாரம் கொண்டிருக்கும் ஒரு இன்றியமையாத அஸ்திபாரம்: நம்பிக்கை. நிதி, அரசியல், ஆவிக்குரிய அனைத்து காரியங்களிலும் இதுவே உண்மை. நம்பிக்கையானது குறைத்து மதிப்பிடப்பட்டால் பேரழிவு நிச்சயம்.

இக்கட்டுரையில் நம்பிக்கையைக் குறித்த மூன்று அம்சங்களை ஆராய விரும்புகிறேன். அவையாவன: தேவன் மீதான நம்பிக்கை, சக விசுவாசிகள் மீதான நம்பிக்கை மற்றும் நம் நம்பிக்கையை விட்டு கொடுப்பதற்கு எதிரான எச்சரிக்கைகள்.

தேவன் மீதான நம்பிக்கை

தேவன் மீதான நம்பிக்கையைக் குறித்து பல உதாரணங்களை முதலில் பழைய ஏற்பாட்டிலும் பின்பு புதிய ஏற்பாட்டிலுமிருந்து ஆராய விரும்புகிறேன். இந்த வேதவாக்கியங்களை விசுவாசத்தோடு நீங்கள் அணுகினால் உங்கள் இருதயம் தெய்வீக நம்பிக்கையினால் நிரப்பப்படும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

சங்கீதம் 27:1-3 ஆகிய வசனங்களில் நம்பிக்கை மற்றும் வெற்றியை பற்றின ஒரு மகத்தான குறிப்பு உரைக்கப்பட்டிருக்கிறது.

> "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? என் சத்தருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள். எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்."

தாவீதுடைய வாழ்க்கை முழுவதும் அவனுக்குக் கிடைத்த வெற்றியின் இரகசியம், தேவன் மீது அவன் கொண்டிருந்த அபார நம்பிக்கையே ஆகும். என்ன நடந்தாலும் சரி, எதிரிகள் அவனுக்கு விரோதமாய் வந்து அவனை உயிரோடே விழுங்கப் பார்த்தாலும், ராணுவ சேனைகள் அவனை எதிர்த்து யுத்தம் பண்ணினாலும், அவன் கர்த்தருக்குள் திடநம்பிக்கையாயிருந்தான். நம்பிக்கையைக் குறித்து மற்றுமொறு அழகான படத்தை நீதிமொழிகள் 3:23-26-ல் காண்கிறோம்.

"அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது. நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும். சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நீ அஞ்சவேண்டாம். கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து. உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்." தேவனுடைய ஜனங்கள் பயப்படத் தேவையில்லை என்று வேதாகமம் தொடர்ந்து போதிக்கிறது. அதனால்தான் தேவனுடைய மக்களுக்கு பயத்தை அளிக்கும் ஒரு போதனை அல்லது தீர்க்கதரிசனத்தை நான் ஏற்க மறுக்கிறேன். தேவன் இங்கே சொல்வது, "துன்மார்க்கனிடத்திலிருந்து ஒரு பிரச்சனை வரும்போது, அது உன்னுடைய பிரச்சனை அல்ல. நீ துன்மார்க்கமாயிராவிட்டால், அது உன்னை தாக்காது" நம்பிக்கையை எங்கே கண்டுபிடிக்க வேண்டுமென்று வசனம் 26 நமக்கு போதிக்கிறது : "கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து.உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார். தேவன் மாறாதவராயிருக்கிறார். அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவர் ஒருபோதும் பதற்றமடைவதில்லை. எதிர்பாராத அல்ல அவசரமான சூழ்நிலை அவருக்கு வருவது கிடையாது. அவரிடம் பதில் எப்போதும் உண்டு.

நீதிமொழிகள் 14:26 கூறுகிறது, "கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு: அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்." தேவனை குறித்த நமது மனநிலை சாரியாக இருந்தால், நாம் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் தங்குமிடமும், பாதுகாக்கும் ஸ்தலமாகவும் தேவன் இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில், ஏசாயா சொல்கிறார்:

“நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்; நீங்களோ அப்படிச் செய்ய மனதாயிராமல்; அப்படியல்ல, குதிரைகளின்மேல் ஏறி ஓடிப்போவாம் என்கிறீர்கள்; அப்படியே ஓடிப்போவீர்கள், வேகமான வாகனங்களின்மேல் ஏறிப்போவாம் என்கிறீர்கள்; அப்படியே உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாய்த் துரத்துவார்கள்.”

தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் திரும்பி வந்து, இளைப்பாறுதலடைந்து, அவரில் நம்பிக்கை கொள்ளும்படி அவர்களை அழைக்கிறார். அமரிக்கையையும், நம்பிக்கையையும் பெறும்படியான தேவனுடைய அழைப்பை யாரெல்லாம் நிராகரிக்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய பிரச்சனைகளிலிருந்து தப்பிக்கும்படி வைத்திருக்கும் திட்டங்களை பொருட்படுத்தாமல், அவைகளால் மூழ்கடிக்கப்படுவதை விரைவில் அறிவார்கள். காலங்காலமாய் இஸ்ரவேலின் சரித்திரத்தில் இது தெளிவாயுள்ளது. தேவனுடைய ஜனங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கும்போது, அவர்களுடைய எதிரிகள் தோற்கடிக்கப்பட்டு, இஸ்ரவேலுக்கு சமாதானம் உண்டாயிருக்கும். ஆனால் இஸ்ரவேலர் தங்களுடைய சுயபெலத்தைச் சார்ந்திருக்கும்போது, அவர்கள் தோற்கடிக்கப்பட்டு பலதேசங்களில் சிதறடிக்கப்பட்டார்கள்.

புதிய ஏற்பாட்டில், “நம்பிக்கை” என மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை மிகவும் வலுக்கட்டாயமான வார்த்தையாகும். இது குறிப்பாக பேச்சில் உள்ள நம்பிக்கையோடு தொடர்புள்ளது. உலக வழக்கமான கிரேக்க பயன்பாட்டில் இது “பேச்சு சுதந்திரம்” என குறிக்கப்பட்டுள்ளது. அல்லது நீங்கள் நினைப்பதை பேசும் உரிமை – அமெரிக்க அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பேசும் உரிமைக்கு கிட்டத்தட்ட இணையானது. நீங்கள் நம்புகிற ஒன்றைக் குறித்து அமைதியாய் இருக்கத் தேவையில்லை என்பது இது சுட்டிக்காட்டுகின்றது. அதைச் சொல்ல உங்க முழு உரிமை உண்டு, அதோடு உங்களை யாராலும் அமைதிப்படுத்த முடியாது. இது ஒரு “உரிமைகள் மசோதா” வார்த்தை ஆகும்.

ஜெபத்தில் தேவன் மீதான நம்பிக்கையை விளக்கும் முதல் புதிய ஏற்பாட்டு வசனப்பகுதி யை பார்ப்போம்:

“பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்.”

(1 யோவான் 3:21-22).

கவனியுங்கள்: உங்கள் ஜெபங்கள் பதிலளிக்கப்படுவதற்கான அடிப்படை தேவை நம்பிக்கை தான். அந்த நம்பிக்கையை சாத்தான் திருட விட்டுவிடாதீர்கள். ஜெபிக்கும் உரிமையையும் விண்ணப்பிக்கும் சுதந்திரத்தையும் பயன்படுத்துங்கள், ஏனென்றால் இயேசுவே அதை உங்களுக்கு வாங்கித் தந்துள்ளார். உங்களுக்கான அரசியலமைப்பில் அது எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளத் தவிக்கும் எதிரியின் இன்னொரு தாக்குதல் ஆக்கினைத்தீர்ப்பு (குற்றம் சாட்டுதல்) ஆகும். ஆவியின்படி நடக்கிற வாழ்க்கை என்பது விடுதலையான மற்றும் சுதந்திரமான வாழ்க்கை என்றும், ஆக்கினைத்தீர்ப்பின் நிழல் அதில் இல்லையென்றும் ரோமர் 8 நமக்குக் காண்பிக்கிறது. நீங்கள் ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் வாழ்ந்தால், ரோமர் 8-ல் சொல்லப்பட்டுள்ள வாழ்க்கைக்குள் பிரவேசிக்கவோ அல்லது வாழவோ உங்களால் கூடாது. இந்த அத்தியாவசியத் தேவை அந்த அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே எழுதப்பட்டுள்ளது. ரோமர் 8:1-ல் “ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.”

ஆக்கினைத்தீர்ப்பானது, பரிசுத்த ஆவியானவரின் விடுதலை, சந்தோஷம், சமாதானம் மற்றும் வல்லமைக்கு மிகப்பெரிய தடையாயிருக்கிறது. ஆனால், நம்முடைய வாழ்வில் இதனை மேற்கொள்ள நம்பிக்கையுடனான சரியான மனநிலை நமக்கு உதவி செய்யும்.

மற்ற விசுவாசிகள் மீதான நம்பிக்கை

நம்பிக்கையின் இரண்டாவது அம்சம், நம்முடைய சகவிசுவாசிகள் மீது நம்பிக்கை வைப்பது. தேவன் மீது நம்பிக்கை வைப்பதைவிட இது இன்னும் கடினமானது என்று அநேகமாக நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம்.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், தமிழ் மொழிப்பெயர்ப்பில் பயன்படுத்தப்படும் திடநம்பிக்கை என்ற வார்த்தை, அந்த நம்பிக்கை தேவன் மீதா அல்லது மனிதர்கள் மீது வைக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்து, வித்தியாசமான கிரேக்க வார்த்தைகளிலிருந்து வருகின்றது. நம்முடைய சக விசுவாசிகளை நம்பும் விதமாக நாம் தேவனை நம்பும்படி அவர் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் நம்பிக்கையை பயிற்றுவிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

ஜனங்களை சமாளிப்பதில் இன்று நமக்கு இருக்கும் கஷ்டம் பவுலுக்கும் இருந்ததென்பது அவரின் நிருபங்களில் வெளிப்படையாய் உள்ளது. கொரிந்தியர் தேவனுடைய பந்தியில் வெறி கொண்டார்கள். ஆவியின் வரங்களை துர்உபயோகம் செய்தார்கள். ஒரு மனிதன் தன்னுடைய தகப்பனின் மனைவியை வைத்துக் கொண்டிருந்தான். பொருளாதாரத்தில் அவர்களுக்கு அறிவுறுத்தல் அவசியமாயிருந்தது. சொல்லப்போனால்,

அவர்களுக்கு இன்னும் பல பிரச்சனைகள் இருந்தன! இருந்தாலும், பவுல் தன்னுடைய முந்தைய கடிதத்தில் அவர்களை திருத்திவிட்டு, 2 கொரிந்தியரில் அம்மக்களுக்கு என்ன சொன்னார் என்பதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன்.

> "என்னுடைய சந்தோஷம் உங்களெல்லாருக்கும் சந்தோஷமாயிருக்குமென்று, நான் உங்களெல்லாரையும் பற்றி நம்பிக்கையுள்ளவனாயிருந்து, நான் வரும்போது, என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் நான் துக்கமடையாதபடிக்கு, அதை உங்களுக்கு எழுதினேன்."
> (2 கொரிந்தியர் 2:3)

இந்த ஜனங்கள் கொண்டிருந்த பிரச்சனைகளை எண்ணிப் பார்க்கும்போது, பவுல் சொன்ன அந்த கூற்று அற்புதமாயிருக்கிறது. எல்லா காரியங்களிலும் அவர்கள் மீது தனக்கு நம்பிக்கை இருந்ததாக பவுல் கூறுகிறார். பவுல் விசுவாசத்தில் வல்லவனாய் இருந்தாரென்பதை அது எனக்கு சுட்டிக்காட்டுகின்றது.

ஜனங்கள் மீது நம்பிக்கைக் கொண்டிருக்கும் திறனானது, ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமென நான் நம்புகிறேன். மேலும், ஜனங்கள் மீது நான் நம்பிக்கை வைத்தால், அது ஜனங்களுக்கு ஏதோவொன்றை செய்கிறது எனவும் நான் நம்புகிறேன். பெற்றோர் தன்னுடைய பிள்ளைகள் மீது நம்பிக்கை வைத்தால், அது அவர்களை உயர்த்துகிறது. ஒருவேளை சந்தேகப்பட்டு குறைகூறினால், அது அவர்களை கீழே தள்ளுவதோடு பாதுகாப்பின்மையையும் உண்டுபண்ணுகிறது.

பிள்ளைகளை புகழ்ந்து பேசாமல் எப்போதும் குறைசொல்லும் பெற்றோர்கள் தங்களை ஞானியென்று எண்ணிக் கொள்ளலாம். ஆனால் ஒரு நபரிடமுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுதல் உங்களை ஞானியென்று நிரூபிக்கிறது. ஏனென்றால் ஒரு நபரின் தவறுகள் பொதுவாகவே வெளிப்படையானவை. மக்களை சந்தேகிப்பது அல்லது குறைக்கூறுவதை விட அவர்கள் மேல் நம்பிக்கை கொள்வது மிக கடினமானது, அதற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தேவை.

நம்முடைய சக விசுவாசிகளை நம்புவதைப் பற்றி வேறுசில வசனங்களைப் பார்ப்போம்.

> "நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன். உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்." (கலாத்தியர் 5:10).

> "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி" (பிலிப்பியர் 1:5).

உங்கள் சபையில் உள்ள அனைவரையும் பற்றி உங்களால் இப்படி நம்ப முடியுமா? அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் தாம் தொடங்கினதை செய்துமுடிப்பார் என்பதை நீங்கள் உண்மையாய் நம்புகிறீர்களா? அப்படி நீங்கள் செய்தால், நீங்கள் ஐக்கியங்கொண்டிருக்கும் மக்களைப் பற்றி வித்தியாசமாய் உணருவீர்கள். அவர்களுடைய பிரச்சனைகள் இன்னும் உங்கள் கண்களுக்குத் தெரியலாம், ஆனால் இப்போது அவர்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பீர்கள்.

முடிக்க முடியாத ஒன்றை தேவன் ஒருபோதும் தொடங்கினதில்லை என்பதே எனது நம்பிக்கை. என்னுடைய வாழ்க்கையிலும் இதையே நான் காண்கிறேன். ஆண்டவர் என்னை அழைத்தபோது, அவர் நிறைய பிரச்சனைகளை எடுத்து கொண்டார். இருப்பினும், அவைகளை சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கையிலேயே அவற்றை எடுத்துக்கொண்டார்.

ஒரு பேராசிரியராக, அறிஞராக மற்றும் தத்துவஞானியாக இருந்த நான், புதிதாய் இரட்சிக்கப்பட்ட பொழுது, என்னை அடைந்ததற்கு தேவன் தான் பாக்கியசாலி என்று எண்ணினேன். அது தவறு என்று, தேவன் என்னோடு இடைப்பட ஆரம்பித்த பிற்பாடு உணர்ந்தேன். அவர் என்னை அழைத்து என் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டபொழுது, எல்லையற்ற பொறுமையும், ஞானமும் அவைகளை கையாள அவருக்கு அப்படிச் தேவைப்படும் என்பதை கண்டுகொண்டேன். ஆனால் இன்று, தேவன் தாம் துவங்கினதை முடிக்க வல்லவர் – எனக்குள்ளும் அப்படி செய்தாரே! என்ற நம்பிக்கையை நானும் பகிர்வதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். பவுல் குறிப்பிடத்தக்க ஒரு வலிமையான வாக்கியத்தை 2 தெசலோனிக்கேயர் 3:3–4–ல் கூறுகிறார்:

> "கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி secretary@derekprince.in அல்லது அலைபேசி 98430 55414 தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

<u>உங்கள் கவனத்திற்கு!!!</u>

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

ISSUE #027

இன்னும் தேவையா?

- ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- கடிதம் மூலமாக அனுப்பவும்.

கொள்ளுவார். மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக் குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்."

தலைமைத்துவத்திற்காக தங்களை நோக்கிப் பார்க்கிற ஜனங்களிடத்தில், எத்தனை போதகர்களால் இப்படிச் சொல்ல முடியும்? போதகர்கள் தங்களுடைய ஜனங்கள் மீது நம்பிக்கை வைத்தால், அது அவர்களை தேவனுக்குள் ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தவும் செய்யும். ஆனால், போதகர்கள் ஜனங்களுடைய பிரச்சனைகளையே பார்ப்பார்களென்றால், விரைவில் அவர்கள் சுயகண்டனம் மற்றும் ஊக்கமின்மையின் கீழ் வந்துவிடுவார்கள்.

ஜனங்கள் மீது நீங்கள் வைக்கிற நம்பிக்கை அவர்களை விடுதலையாக்கும். ஜிம் மோர் ஒரு முறை சொன்னார், "ஒரு மனிதன் தன் மனைவியோடு வாக்குவாதம் செய்யும்போது, அவளை கண்டனத்தின் கீழ்கொண்டு வருவதே அவனுடைய மிகப்பெரிய ஆயுதம் ஆகும்." கண்டனத்தின்கீழ் உங்கள் மனைவிகளை கொண்டுவரும் போது, கணவர்களாகிய நீங்கள் பின்நாளில் சந்திப்பதற்கு பிரச்சனையை தான் சேர்த்து வைத்துக் கொள்கிறீர்கள். ஆனால் அவர்கள் மீதுள்ள நம்பிக்கையின் நிமித்தம் அவர்களை உற்சாகப்படுத்துவீர்களென்றால், சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்குள் அவர்களை உயர்த்துவீர்கள்.

நம்பிக்கையை இழப்பதை குறித்த எச்சரிக்கைகள்:

நாம் இப்பொழுது நம்முடைய நம்பிக்கையை விட்டுவிடுவதை குறித்து வரும் எச்சரிப்புகளை எபிரெயர் நிருபத்திலிருந்து காணலாம். எபிரெயருடைய மிகப்பெரிய பிரச்சனை என்னவென்றால் அவர்கள் விசுவாசத்தில் தொடங்கினார்கள், ஆனாலும் தங்களுடைய கிரியைகளுக்குப் பின்வாங்கிப் போனார்கள். ஆவியின் விடுதலையோடு தொடங்கினார்கள், ஆனால் மதம், சடங்கு மற்றும் சட்டத்திட்டங்களுக்கே மீண்டும் திரும்பி விட்டார்கள்.

விசுவாசிகளுக்கென எழுதப்பட்ட ஐந்து எச்சரிப்புகள் அங்கே உள்ளன. ஐந்தில் மூன்றை இப்பொழுது ஆராயலாம். இவை புதிய ஏற்பாட்டில் மிக கடுமையான எச்சரிப்புகள் சில ஆவன. எழுத்தாளரின் சாராம்சம் என்னவென்றால், "உன் நம்பிக்கையை விட்டுவிடாதே, தேவனை கொண்டாட முடியாத அளவிற்கு மிகுந்த மதவாதியாக மாறிவிடாதே. அதேப்போல உன்னுடைய மதம் இனிமேல் மகிழ்ச்சியாய் இராது என்று மிகவும் தீவிரமாக மாறிவிடாதே." நாம் செய்ய வேண்டிய காரியங்களை செய்யும் ஆர்வத்தில் மூழ்கி, அதைச் செய்வதில் உள்ள மகிழ்ச்சியை இழந்துவிடுகிறோம்.

ஆவிக்குரிய வாழ்வின் மிகப்பெரிய சொத்துக்களில் ஒன்று, இயல்பாய் செய்யும் காரியங்கள். அதை நாம் இழக்க முடியாது. என் வாழ்க்கை திரும்பி பார்க்கும்போது நான் கண்டு பிடித்த காரியம் என்னவென்றால், நான் மிக முக்கியமான தீர்மானங்களில் பெரும்பாலானவை தற்செயலாக அல்லது நான் தீர்மானிக்காமல் நிகழ்ந்தவையாகும். அது என்னை மிக ஆவிக்குரியவனாய்க் காட்டாவிட்டாலும் அது தான் உண்மை. உதாரணத்திற்கு, 1963-ல் நான் அமெரிக்காவிற்கு வந்தது தீர்மானிக்காமல் நடந்துதான். ஆனால் அது என் வாழ்வின் மிகப்பெரிய திருப்புமுனையாய் மாறியது.

நம்முடைய திட்டங்கள் மற்றும் ஆயத்தங்கள் போதுமானவை அல்ல, அவை காரியத்தை நிறைவேற்றாமல் போகும். மனித திறமை தளத்தில் மட்டுமே தீர்மாக்கப்பட்ட திட்டங்கள் ஒரு இஸ்மவேலைதான் உருவாக்கும். தேவனுடைய வல்லமையையும் கிருபையையும் விட்டுவிட்டு, ஆபிரகாம் பிறப்பித்த சிறந்தது இஸ்மவேல். அவன் போதுமானவன் அல்ல.

ஒரு காரியம் தேவனிடத்திலிருந்து வந்ததா இல்லையா என்பதை உறுதிப்படுத்த நான் பயன்படுத்தும் ஒரு சோதனை அது இயற்கைக்க அப்பாற்ப்பட்டு உருவானதா என்பது தான். அது முற்றிலும் என்னுடைய திட்டங்களின் விளைவாகவே இருந்தால் உண்மையிலே, அது தேவனிடத்திலிருந்துதான் வந்தா? என்ற கேள்வியை நான் எழுப்ப வேண்டும். நடைமுறையில் ஒரு காரியத்தை அடைய பிரயாசப்படுவதை நான் நம்புகிறேன், ஆனால் அதன் துவக்கம் இயற்கைக்கு அப்பாற்பட்டதாக தான் இருக்க வேண்டும்.

இஸ்மவேலுக்கும் ஈசாக்குக்கும் உள்ள வித்தியாசம் அதுதான். இஸ்மவேல் இயற்கையாய் உருவானான்; ஆனால் ஈசாக்கு இயற்கைக்கு அப்பாற்பட்டு உருவானவன். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ அந்த அளவிற்கு ஆபிரகாமின் யோசனைக்கும் திறனுக்கும் உயர்ந்தவன் ஈசாக்கு.

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள்

Derek Prince
MINISTRIES INDIA

Contact us

www.derekprince.com/en-in
admin@derekprince.in
Ph : 9585538201
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM SALAI,
Trichy - 620017

நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."

ஏசாயா 55:8-9

பூமிக்குரிய தளத்தில் நாம் திட்டமிடுகிறோம்; தேவன் பரலோக தளத்தில் துவக்குகிறார். அப்படியென்றால் அது பூமியில் நிறைவேற்றப்படாது என்று அர்த்தமல்ல. ஆனால் அது பரலோக மண்டலத்தில் துவங்கப்பட்டதாய் இருக்க வேண்டும்.

மனித திட்டமிடுதலின் விளைவாக வரும் காரியங்கள் தரக்கூடிய அழுத்தங்களுக்கு உள்ளே சென்று நம்மால் சமாளிக்க முடியாது. என் முதல் மனைவி லிடியாவுடன் (Lydia) என்னுடைய திருமணம் இயற்கைக்கு அப்பாற்பட்டு துவங்கப்பட்டது. நான் யாரை மணக்க வேண்டும் என்பதை தேவன் எனக்க காண்பித்தார். எங்களுடைய திருமணம் மனித திட்டத்தால் வந்திருந்தால் அது தந்த அழுத்தங்களை எங்களால் சமாளித்திருக்க முடியாது.

என்னுடைய இரண்டாவது மனைவி ருத்தை நான் மணந்ததும் அதே போலத்தான். இந்த திருமணத்தில் தேவன் தம்முடைய சித்தத்தை எங்கள் இருவருக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட மற்றும் தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தினார். திருமணம் என்பதே இயற்கைக்கு அப்பாற்பட்டுதான் துவங்குகிறது; அது மனிதனுடைய தளமட்டத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. தேவன் தான் திருமணத்தை நிர்ணயித்தார்; மனிதன் அல்ல. அதனால் தான் இது ஒரு புனித சடங்காக இருக்கிறது.

நம்பிகையை அடிப்படையாகக் கொண்ட நிபந்தனைகள் அடங்கிய மூன்று வேதப்பகுதிகள் எபிரெயர் நிருபத்தில் உள்ளன. முதலாவது, எபிரெயர் 3:6

"கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்."

"பேச்சு சுதந்திரம்' மூலமாகத்தான் திடநம்பிகை வெளிப்படுத்தப்படுகிறது என்று ஏற்கெனவே பார்த்தோம். நாம் தேவனைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உண்மை சபையாக இருப்பதற்கான நிபந்தனை: கடைசிவரையிலும் நாம் நம்முடைய நம்பிகையை உறுதியாய்ப் பற்றிப்பிடித்துக்கொண்டு தேவனுக்குள் மேன்மைபாராட்ட வேண்டும்.

இரண்டாவது, எபிரெயர் 3 : 14 சொல்கிறது

நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.

நம்முடைய நம்பிகையை நாம் விட்டுவிடாமல் இருப்பது என்ற நிபந்தனையில்தான் நம்முடைய இரட்சிப்பு உள்ளதாக இந்த வசனப்பகுதி காண்பிக்கிறது. பாரம்பரிய இறையியல் சொல்நடையில், இது 'பரிசுத்தவான்களுடைய பொறுமை' என்று அறியப்பட்டிருக்கிறது. பொறுமை இல்லாதவர்கள் பரிசுத்தவான்கள் என்ற தகுதி அடையமுடியாது.

கடைசியாக, எபிரெயர் 10 :35 -36 வசனங்களை பார்க்கும்பொழுது, இராணுவ உலகினின்று ஒரு குறிப்பு எடுக்கப்பட்டிருப்பதை நாம் கண்டுபிடிக்கிறோம்.

"ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."

ஒரு படைவீரனின் சர்வாயுதவர்க்கத்தில் உள்ள ஒரு முக்கிய பாகம் அவனுடைய கேடகம் (அ) கவசம் ஆகும். கிரேக்க இலக்கியத்தில், ஒரு சிப்பாய் தனது கேடகத்தை தூக்கிப்போட்டுவிட்டு கேடகம் இல்லாமல் யுத்தக்கலத்திலிருந்து ஓடுவதுதன் மிகப்பெரிய அவமானமாகக் கருதப்பட்டது. இந்த வசனத்தில் 'விட்டுவிடாதிருங்கள்' என்று எழுத்தாளர் சொல்லும்போது, உங்களுடைய கேடகத்தை விட்டுவிடும் அவமானத்தை எண்ணுகிறார் என்று நான் நம்புகிறேன். ஆகவே அவர் இப்படிச் சொல்லுகிறார், 'உங்கள் கேடகமாக நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள்; ஏனென்றால் அதைப் பிடித்துக்கொண்டால் உங்களுக்கு மிகுந்த பலன் உண்டாகும்'. கண்டிப்பாக நாம் நம்முடைய நம்பிக்கையின் கேடகத்தை இறுகப்பற்றிக்கொண்டு, அதை எதற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிடமாட்டோம் என உறுதி ஏற்கவேண்டும்.

சவால் மற்றும் பயம் நிறைந்துள்ள எதிர்காலத்தை நம்மால் பார்க்க முடிகிறது. உலகின் எல்லா பகுதிகளிலும், சமாதானம் அச்சுறுத்தப்படுகிறது. அதோடு கிளர்ச்சியும் நிச்சயமற்ற தன்மையும் ஆளுகிறது. இருந்தாலும் இதையெல்லாம் தாண்டி, நம்முடைய சூழ்நிலைக்கேற்ற பதிலையும் திட்டத்தையும் வைத்துள்ள ஒரு ராஜா கிறிஸ்தவர்களாகிய நமக்குண்டு. புயலில் அடைக்கலமாய் இருப்பேன் என்று சொன்னவர் அவரே. அவர் ஆளுகை செய்கிற இராஜ்ஜியம் அசைவில்லாதது மற்றும் நாம் எந்த அஸ்திபாரத்தின் மீது கட்டுகிறோமோ, அது அசைவில்லாதது.

ஆகையால், தேவனை நம்பிகையாகக் கொண்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் நீதிமொழிகள் 3:23-26 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரித்துக் கொள்ளலாம்:

"அப்பொழுது நான் பயமின்றி என் வழியில் நடப்பேன். என் கால் இடறாது. நான் படுக்கும்போது பயப்படாதிருப்பேன்; நான் படுத்துகொள்ளும்போது என் நித்திரை இன்பமாயிருக்கும். சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நான் அஞ்சமாட்டேன். கர்த்தர் என் நம்பிக்கையாய் இருப்பார்."